1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கடன் நிவாரண சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1972) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(தற்காலிகத் தலைவர் திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு—தலைமை.)

(2) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1972):

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன்: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1938-ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1938) விதித்துறைகளில் பல, காலத்திற்கு ஒவ்வாதவையாகிவிட்டன. இச்சட்டத்தை இன்றைய நிலைமைக்கேற்ப மாற்றியமைக்கவும், இம்மாநிலத்தின் கடன்பட்டுள்ள விவசாயிகளுக்குத் துயர் தணிப்பு அளிக்கவும் இச்சட்ட வரைவு கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை இந்த அவையினர் அறிவர்.

இச்சட்ட வரைவு குறித்து வந்த முறையீடுகளைப் பரிசீலித்தும், நேரில் சான்று பகர வந்தவர்களை விசாரணை செய்தும், இணை ஆய்வுக் குழு இச்சட்டவரைவில் சில மாற்றங்களைச் செய்துள்ளது. அவ்வாறு செய்யப்பட்டுள்ள முக்கிய மாற்றங்களில் சிலவற்றை நான் கூற விழைகிறேன்.

(1) மூலச் சட்டத்தில், விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன் களுக்கு $6\frac{1}{4}$ சதவீத வட்டி வரையறுக்கப்பட்டிருந்தது. கூட்டுறவுத் துறையிலும், வங்கிகளிலும் நிலவிவரும் வட்டிவீதங்களைக் கருத்திற் கொண்டு, மேற்படி வட்டி வீதம் ஆண்டுக்கு 9 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது.

@ 232—243-ம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(2) மூலச் சட்டத்தின்கீழ் ஒரு விவசாயிக்குச் சொந்தமான கட்டடங்களிலிருந்தும் நிலங்களிலிருந்தும் அவருக்குக் கிடைக்கும் மொத்த ஆண்டு குத்தகை மதிப்பு ரூ. 600-க்கு மேற்பட்டாலும் அல்லது ரூ. 600-க்கு மேற்பட்ட அரை ஆண்டு வருமானத்தின்மீது அவருக்குத் தொழில்வரி விதிக்கப்பட்டிருந்தாலும் அச்சட்டத்தின் பயனை அவர் பெறமுடியாது. இன்றைய நிலையைக் கருத்திற்கொண்டு, இந்த வருமான வரம்பு ரூ. 600-லிருந்து ரூ. 1,200-ஆக உயர்த்தப்படவிருக்கிறது.

(3) இச்சட்டவரைவில் குறிப்பிட்டுள்ளவாறு, 1966-ஆம் ஆண்டு அக்டோபர் 1-ஆம் நாளுக்கு முன்பு வாங்கிய கடன்கள் அனைத்திற்கும் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் 1-ஆம் நாளன்று நிலுவையாயுள்ள வட்டித் தொகையைத் தள்ளி விடவேண்டுமென முன்னர் இச்சட்டவரைவில் குறிப்பிடப்பட்டிருந்தது, இன்றைய நிலையில் தேவையற்றதாகுமென குழு கருதியது. எனவே, மூலச் சட்டத்தின் 8-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவு நீக்கப்படவேண்டும்.

(4) மூலச் சட்டத்தின் 9-ஏ (10) (ii) (a) பிரிவின்கீழ் அடமான மீட்புரிமை 1937-ஆம் ஆண்டு செப்டம்பர் 30-ஆம் நாளுக்கும் 1948-ம் ஆண்டு ஜனவரி 30-ஆம் நாளுக்கும் இடையேயுள்ள கால அளவில் ஏற்பட்டிருந்தால், முதல் கொதுவைதாரரிடமிருந்து மாற்றல் பெற்றவருக்கும் முதல் கொதுவைதாரரின் வாரிசுகளிடமிருந்து மாற்றல் பெற்றவருக்கும் அச்சட்டத்தின் 9-ஏ (3) முதல் (9) வரையிலுள்ள பிரிவு பயன்படாத நிலை இருந்தது. இத்தகைய ஒரு விதித்துறை தேவையல்லவென்று குழு முடிவு செய்தது.

(5) "1971 அக்டோபர் 1-ஆம் நாள்" என்றிருப்பதற்கு பதிலாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இச்சட்டத்தைக் கொண்டு வரும் நோக்கத்தை அறிவித்த தேதியை, அதாவது "1972 மார்ச் 1-ம்ஆம் நாள்" என்று அமைத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

(6) 1972 மார்ச் 1-ஆம் நாளுக்குப் பின்னர், ஒரு நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ள நடவடிக்கை எதுவும், ஒரு விவசாயி இச்சட்டத்தின் பயனைப் பெற முடியாதவாறு அவரைத் தடுக்கும் வகை வகையில் அமையக்கூடாதென்பது குழுவின் கருத்து. எனவே சில நேர்வுகளில் இயங்காச் சொத்து விற்பனைகளை ரத்து செய்வதற்கு நீதி மன்றத்திற்கு அதிகாரம் அளிக்கும் வகையில் 23-சி பிரிவை அமைத்துக்கொள்கிற புதிய பகுதி ஒன்று இச்சட்டவரைவில் சேர்க்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட இச்சட்ட வரைவினை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

தற்காலிகத் தலைவர் : மன்றத்தின் முன்உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது-. சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பிரிவுகள் 2 முதல் 25 வரை மன்றத்தின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன. பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப் புரை ஆகியவை மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1972) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தற்காலிகத் தலைவர் : மன்றத்தின் முன்உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு விவசாயிகள் கடன் நிவாரண (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1972) நிறை வேற்றப்படவேண்டும்":

தீர்மானம், மன்றத்தின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(3) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1972).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 42/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

@ 244—249-ம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.